www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

V11Com

விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்
முதல் திருப்புதல் தேர்வு - பிப்ரவரி 2023

வகுப்பு 11
வணிகவியல்

கால அளவு: 3.00 மணிநேரம் | மதிப்பெண்கள்: 90

பகுதி - அ

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதர வரிசையோடு சேர்த்து எழுதவும்.** **20×1=20**

1) அர்த்தசாத்திரம் என்ற புத்தகம் யாரால் எழுதப்பட்டது.
அ) கௌடில்யர் ஆ) வால்மீகி
இ) திருவள்ளுவர் ஈ) இளங்கோவடிகள்

2) இரும்பிலிருந்து தாதுக்களைப் பிரித்தெடுக்கும் தொழிற்சாலை என்பது
அ) கட்டுமானத் தொழில்கள் ஆ) தயாரிப்புத் தொழில்கள்
இ) பிரித்தெடுக்கும் உற்பத்தித் தொழில்கள் ஈ) மரபுசார் உற்பத்தித் தொழில்கள்

3) இந்துக் கூட்டுக்குடும்பத் தொழிலில் உறுப்பினர்களை எவ்வாறு அழைப்பாய்?
அ) கர்த்தா ஆ) கூட்டுவாரிசுதாரர்
இ) தலைமுறை ஈ) கூட்டாளிகள்

4) கூட்டுறவு தோல்வி அடைவதற்கான காரணம்
அ) வரம்பற்ற உறுப்பினர் ஆ) ரொக்க வியாபாரம்
இ) தவறான நிர்வாகம் ஈ) இழப்பு ஏற்படுவதால்

5) அரசு நிறுவனங்களின் முதன்மையான நோக்கம்
அ) இலாபம் ஈட்டுதல் ஆ) வேலை வாய்ப்பை உருவாக்குதல்
இ) மக்களுக்கு சேவை செய்தல் ஈ) மேற்கூறிய அனைத்தும்

6) இந்திய ரிசர்வ் வங்கி ........... நாள் முதல் தன் பணிகளைத் தொடங்கியது.
அ) ஏப்ரல் 1, 1936 ஆ) ஏப்ரல் 1, 1935 இ) மார்ச் 1, 1934 ஈ) ஏப்ரல் 1, 1934

7) எந்த வகையான கணக்கு குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட சில தொகையைச் செலுத்த வேண்டியது கட்டாயம்?
அ) சேமிப்பு வைப்பு கணக்கு ஆ) நிலையான வைப்பு கணக்கு
இ) நடப்பு வைப்புத் தொகை ஈ) தொடர் வைப்பு கணக்கு

8) பண்டகக்காப்பகம் ............. தடையை நீக்குகிறது.
அ) ஆள்சார்தடை ஆ) காலத்தடை
இ) இடர்ப்பாட்டுத்தடை ஈ) அறிவுசார் தடை

9) கீழ்வருவனவற்றுள் எது பொதுக்காப்பீடு வகையை சார்ந்தது அல்ல.
அ) கடல்சார் காப்பீடு ஆ) ஆயுள் காப்பீடு
இ) மருத்துவ காப்பீடு ஈ) தீக்காப்பீடு

10) புற ஒப்படைப்பின் முக்கியமான நன்மைகளில் ஒன்று
அ) உற்பத்தி திறன் ஆ) செலவு குறைப்பு இ) திறன் ஈ) அலகுகள்

11) தொழிலின் சமூகப் பொறுப்புணர்வு என்பது நிறுவனத்திற்கு எவ்வாறு உதவுகிறது?
அ) இலாபத்தை அதிகரித்தல் ஆ) இலாபம்
இ) நிலைத்தன்மை ஈ) சமநிலை

12) நேர்மைப் பங்குதாரர்கள் ஒரு நிறுமத்தின் .......... ஆவர்.
அ) ரொக்க அடிப்படை கடனீந்தோர் ஆ) உரிமையாளர்கள்
இ) கடனாளிகள் ஈ) மேற்கண்ட ஏதுமில்லை

13) அமெரிக்க வைப்பு இரசீத வெளியிடப்படுவது
அ) கனடா ஆ) சீனா
இ) இந்தியா ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

14) வெளிநாட்டிற்கு சரக்குகள் விற்கப்படுவது ............ என அழைக்கப்படுகிறது.
அ) இறக்குமதி ஆ) ஏற்றுமதி இ) மறு ஏற்றுமதி ஈ) மீண்டும் ஏற்றுமதி

15) சிற்றளவு நிலையிட சில்லறை வியாபாரி என்பதனுள் ........... அடங்குவர்.
அ) இடம்பெயர் வியாபாரிகள் ஆ) சமை தூக்கும் வியாபாரிகள்
இ) பொதுப்பண்டகசாலைகள் ஈ) வாகனத்தில் விற்போர்

16) இறக்குமதியாளரால் தயாரிக்கப்பட்டு சரக்கை வாங்குவதற்கு ஏற்றுமதியாளருக்கு அனுப்பப்படும் ஆவணம்
அ) இடாப்பு ஆ) சரக்காணை இ) விசாரணை ஈ) கப்பல்வாடகைமுறி

17) உலக வங்கி அமைந்திருப்பது
அ) வாஷிங்டன் DC ஆ) நியூயார்க் இ) டோக்கியோ ஈ) ஹாங்ஹாங்

18) சட்டத்தால் நடைமுறைபடுத்தப்படும் ஓர் உடன்படிக்கை
அ) நிறைவேற்றக்கூடிய ஆ) ஏற்றுக்கொள்ளக்கூடிய முனைவு
இ) ஒப்புக்கொண்ட வாக்குறுதி ஈ) ஒப்பந்தம்

19) மூன்றாம் நபர் என்று யாரைக் கூறுகின்றோம்?
அ) வாக்குறுதி அளிப்பவர் ஆ) வாக்குறுதி பெறுபவர்
இ) முகவர் ஈ) சட்டரீதியான பிரதிநிதி

20) வருமானம் ஈட்டப்பட்ட ஆண்டு என்பது
அ) கணக்கீட்டு ஆண்டு ஆ) முந்தைய ஆண்டு
இ) ஒளி ஆண்டு ஈ) நாட்காட்டி ஆண்டு

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

பகுதி - ஆ 7×2=14

**ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. கேள்வி எண் 30க்கு கட்டாயம் விடையளிக்கவும்.**

21) வியாபாரம் என்றால் என்ன?
22) இந்துச் சட்டத்தின் இரண்டு பிரிவுகள் யாவை?
23) பன்னாட்டு நிறுமத்திற்கு ஏதேனும் இரண்டு உதாரணங்கள் தருக.
24) வணிக வங்கிகளின் பொருள் தருக.
25) போக்குவரத்து வரையறு.
26) தொழில்முறை நன்னெறி பொறுப்புணர்வு என்றால் என்ன?
27) தரகர் என்பவர் யார்?
28) இறக்குமதி வியாபாரம் என்றால் என்ன?
29) ஒப்பந்தம் என்றால் என்ன?
30) திரு.இராகவன் அவர்கள் பல்வேறு இடங்களில் கடைகளை அமைத்து ஒரே மாதிரியான தரமான பொருட்களை விற்பனை செய்து வருகிறார் இவை எவ்வகையான சில்லறை வியாபார கடைகள்?

பகுதி - இ 7×3=21

**ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. கேள்வி எண் 40க்கு கட்டாயம் விடையளிக்கவும்.**

31) மனித செயல்பாடுகள் என்றால் என்ன?
32) தனியாள் வணிகத்திற்கு சில உதாரணங்கள் கூறுக.
33) தேசிய மின்னணு நிதிப்பரிமாற்றம் விளக்குக.
34) கப்பல் இரசீது என்றால் என்ன?
35) தனி உரிமையியலின் வகைகள் யாவை?
36) உள்நாட்டு வியாபாரத்தின் வகைகள் யாவை?
37) குளிர்சாதன பண்டக காப்பு என்றால் என்ன?
38) எந்தெந்த வழக்குகளில் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பிக்கலாம்?
39) கூட்டாண்மை நிறுவனத்தின் குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது?
40) பன்னாட்டு நிறுமங்கள் இந்தியாவிற்கு தேவையா? தேவையெனில் ஏன் என்று கூறவும்?

பகுதி - ஈ 7×5=35

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

41) அ) வணிகத்தின் பல்வேறு தடைகளை விவரி. (ஏதேனும் 5)

**(அல்லது)**

ஆ) வணிக வங்கிகளில் நிகழ்த்தப்படும் பல்வேறு முதன்மைப் பணிகளை விவரி.

42) அ) கூட்டாண்மைக் கலைப்பின் வகைகளை விவரி.

**(அல்லது)**

ஆ) செயல்முறை விதிகளில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை?

43) அ) துறைவாரி நிறுவனங்களின் நன்மைகளை விவரி (ஏதேனும் 5)

**(அல்லது)**

ஆ) காப்பீட்டின் கோட்பாடுகளை விவரி. (ஏதேனும் 5)

44) அ) ஏதேனும் ஐந்து தனிநபர் முதலீட்டு வழிகளை விளக்குக.

**(அல்லது)**

ஆ) சுயஉதவிக்குழுக்களின் நோக்கங்களை விவரி.

45) அ) உள்நாட்டு வணிகத்திற்கு, பன்னாட்டு வணிகத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

**(அல்லது)**

ஆ) செலுத்தல் சமநிலைக்கும் வாணிப சமநிலைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

46) அ) சட்டப்படி செல்லக்கூடிய ஓர் ஒப்பந்தப்புள்ளியின் இன்றியமையாத கூறுகள் யாவை?

**(அல்லது)**

ஆ) சரக்கு மற்றும் சேவை வரியின் வகைகளை விளக்குக.

47) அ) தனியாள் வணிகத்தின் சிறப்பியல்புகள் யாவை? (ஏதேனும் 5)

**(அல்லது)**

ஆ) பல்வேறு வகையான பண்டகக்காப்பகங்கள் யாவை? விளக்குக. (ஏதேனும் 5)

- - - - - -

www.Padasalai.Net